# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௩௯ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௪<br>சோபகிருது, தை.<br>*1964 ஜனவரி, பிப்ரவரி.* | மலர் ௯. |
|---|---|---|

# அருட்டிரு விவேகானந்த அடிகள் நினைவு மலர்

## பாரதத்தின் அருள் விளக்கு

ச. பாலசுந்தரம்

1 மண்ணுலக முழுமைக்கும் தலைமை தாங்கி
வாலறிவன் தனக்கன்றி அடிமை யாகா
தெண்ணரிய கலைஞானம் இறைஞா னத்தால்
ஏற்றமிக ஒளிர்ந்தபுகழ் 'இந்தியா' தன்
கண்ணனைய கலைப்பண்பை மறந்து வீணே
கருத்தற்ற சடங்குகளுக் கடிமை யாகி
உண்ணிறையும் ஒளியுமிழந் துரிமை நீங்கி
ஒண்டவந்த மிண்டர்களுக் காளாய் நின்று

2 சழக்குமிக்க சாதியினல், சான்ருேர் கூருச்
சாத்திரத்தால், சமயத்தால் மொழியால் பொல்லா
வழக்குரைத்துப் பகைவளர்த்து வளமி ழந்து
வந்தவர்தம் கால்பிடித்து வாழ எண்ணி
இழுக்குடைய செயல்களையே விரும்பிப் பேணி
ஏழ்மையறி யாமையிருட் காட்டில் பொய்ம்மை
முழக்கமிட்டுச் செல்லுங்கால் முதிர்ந்த ஞான
முருகொளிரும் அருள்விளக்காய் வந்தார் அண்ணல்.

3 வீறமை பாரதத்தின் விழியெனும் வங்கநாட்டின்
பேறெனவந்து தோன்றிப் பிறங்கொளி உலகெங் கெங்கும்
ஏறிட வளர்ந்து ஞாலத் தியல்பெலாம் அறிவா லோர்ந்து
தேறியிவ் வுலகம் வாழத் திகழ்ந்தமெய்ஞ் ஞானச்செம்மல்

4 ஆய்ந்தறி விளக்க மாகி அமைதிசேர் அறச்சால் பாலே
வாய்ந்தசீர் 'புத்த ரா'கி வண்மையால் தன்னை யீந்து
தோய்ந்துயிர் தோறும் அன்பைச் சொரிந்திடும் 'ஏசு'வாகி
ஏய்ந்துடன் பிறப்பா எண்ணி எதிர்ப்பினை அஞ்சா தூன்றி

5 நலம்வினை செயல்கள் தம்மால் 'நபிகள்நாயகமாய்' வேதம்
வலமிகச் சாற்றும் தூய வாய்மையால் ''வியாச''ராகிச்
சலமகல் கொள்கையாலே 'சங்கர' ராகித் தேர்ந்த
புலமிகு பணியால் 'ராமா னுச'ரெனப் பொலிந்து, ஞாலம்

6 அருளினல் அறத்தால் ஓங்க ஆண்டவன் தூதாய் வந்த
மருளறு ஞானவள்ளல்; மதத்தினல் மாரு னோர்க்குப்
பொருளிது வென்று காட்டப் போந்தபொற்சுடரிந் நாட்டின்
தருமமோர் உருவாய்வந்த தகுதிசால் துறவின் சோதி!

7 நல்லிசை ஞானம் வீரம் நலந்தரும் கலைக ளோடு
தொல்குடித் துணிவும் தூய குலந்தரு சால்பும், பண்பார்
செல்வமும் திறனுர் இன்பச் செயல்களும் இயற்கை யாகப்
பல்வகைக் கல்வி கேள்வி பாங்குறப் பயின்ற மேலோன்

8 தவத்தினல் மாசு நீங்கித் தலைவனை உணர்ந்து முன்னைப்
பவத்தினல் துன்பச் சேற்றில் பகுத்தறிவின்றி ஆழ்ந்து
தவித்திடும் மக்கள் தம்மைத் தன்கரம் நீட்டித் தூக்கிக்
குவித்திடப் போந்த ஞானக் கோமகன் விவேகானந்தர்

9 செருக்கினல் எதிர்ப்போருக்குச் சிங்கஏறெத்துக், கல்வித்
தருக்கினல் வாதிப் போர்க்குத் தக்கிண மேரு வொத்து
நெருக்குதீக் குணங்கள் தீண்டாநெருப்பென விளங்கிஞானப்
பெருக்கினல் கடல்கள் ஏழும் பின்னுறச் செய்த பெம்மான்.

10 ''பன்னருந் தவத்தால் தாமே பரமனுர் பதத்தை எய்தல்
தன்னல மா''மென் றெண்ணித் தன்தவம் முழுதும் வாழும்
மன்னுயிர்க் கெல்லாம் ஈய மனங்கொண்ட மாதவத்தோன்
துன்னரும் ராச யோகி தூய விவேகா னந்தர்

11 கொடுமைகட்கஞ்சா நெஞ்சும், கோளினுற் பிறழா நோன்பும்
அடிமையை வெறுக்கும் சால்பும் அறத்தினை மறவாநோக்கும்
நடுவறிந் துரைக்கும் நாவும் நானிலம் வாழ்வு கொள்ள
வடிவுகொண் டிங்கு வந்த வண்ணமே விவேகா னந்தர்

12 சாதியின் உயர்வால், சடங்குசெய் முறையால்,
சபித்திடும் மந்திர மவையால்,
பூதியைப் பூசிப் புரோகிதம் செய்து
பொய்ப்புகழ் விரித்துரைப் பதனுல்
ஆதியை உணர்தல் ஆவதிங் கில்லை
அந்தணர் அரிசினர் என்ற
பேதமும் சூதும் வாதொடு நீக்கிப்
பெரும்பணி மன்பதைக் கியற்றும்

13 யாவரும் இறைவன் கோயிலில் அமர்வார்
ஞாலமீ துயிரெலாம் இறைவன்
சீவனே என்று தேர்ந்துதொண் டாற்றின்
திருவருள் கூடுமென் றறைந்து
நாவலந்தீவு முழுமையும் முரசு
முழங்கியந் நற்பணி பரப்ப
மேவிய மடங்கள் தோற்றிய வீரர்
விவேகா னந்தர்தாள் போற்றி!

14 வெற்றுடல் பேணுவிஞ் ஞானமே வளர்த்து
விரிகடல் உலகினை மயக்கும்
கற்றவர்; இறைவர் கழலினை சேர்மெய்ஞ்!
ஞானமே கருதிட வேண்டி
முற்றிய தவத்தால் மூதறி வோடும்
முகிழ்த்த நரேந்திர தத்தர்
பற்றிய விவேகப் பாங்கினைப் பரம
ஹம்சர்தம் பரிவினுல் அறிந்து

15 "ஒப்பிலாச் சீடன் நீ"யென உணர்த்தி
உலகிடை ஆன்மிகம் ஓங்கத்
தப்பருந் தவத்தைத் தாமவர்க் கீந்து
தரையினில் அருட்பயிர் விளைக்கச்
செப்பிய முறையாற் சென்ற மெரிக்கச்
'சிகாகோ' நகரினில், வேத
மெய்ப்பொருள் விரிக்க வியந்துல கேத்தும்
**விவேகானந்தர்தாள் போற்றி!**

சென்ற இதழின் தொடர்ச்சி :

# களவியல் உரை நலம்

## (முதல் நூற்பா உரை)

(திருவாட்டி. மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

ஆயின், ஆசிரியர் கூறும் இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் என்னும் காரணம் ஏற்புடைத்தாகதோ எனின், ஆகாது. என்னை? தொல்லாசிரியன்மார் கூற்றுக்கு இத்துணிபு மாறு கொள்ள லான் என்க. புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமெனின், சான்றோர் ஒழுகிய நெறிகளெல்லாம் புலவரால் நாட்டப் படாததோர் ஒழுக்கமோ என்னும் வினவந்தெய்தும். புலவர் மார் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராமாகலின் அவர்களால் நாட்டப்படாததோர் ஒழுக்கம் இவ்வுலகத் தின்று. என்னை? அம்மையினருட்பாலையுண்டு ஆராவின்பத் தமிழருள் செய்த ஞானசம்பந்தப் பெருமானார் புலவரே யன்றோ? சூலை பெற்றுச் சிவன்சேவடி பெற்ற அப்பர் பெருந் தகையார் புலவரேயன்றோ? தோழமை பூண்டு தமிழ்பாடிய சுந்தரர் புலவரேயன்றோ? இவர்களால் இனியது நல்லது என்று நாட்டப்பட்ட சைவ நெறி இல்லதின் பாற்படுமோ? அன்றியுங் கடம்பமர்காளை 'பலர் புகழ் நன்மொழிப் புலவ ரேறே' என்பதனால் அவனும் ஒருபுலவனே யன்றோ? கழக மோடமர்ந்து தமிழாய்ந்த கண்ணுதற் கடவுளும் புலவரே யன்றோ? இவர்களால் நாட்டப்பட்ட நெறியினையும் செந் தமிழினையும் இல்லது இனியது நல்லதெனக் கொள்ளலாமோ? எனவே ஆசிரியர் நக்கீரர் கூறும் இல்லது இனியது நல்ல தென்னும் காரணம் வலிவுடைத்தன்றென்க.

ஆயின், ஆசிரியர் ஏலாவுரை கூறினரோ எனின், அன்றென்க என்னை? தமிழர் தம்நெறி நின்றும் பிறழ்ந்து 'உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே' என்ற திறம் மறந்து உடலை ஒறுத்து ஒண்ணுதற் பெண்டிரே கண்கண்ட பேயெனு மருட்கை நிறைந்து அதனால் இறைவனருட் படைப் புக்களை யிகழ்ந்த பழியும் பாவமும் பற்றிநின்று அறப்பெற்றி யினின்று மகன்ற தமிழர்பால் இஃதே பொருணெறி யெனப் புகன்று வழக்கிடப்புகின் அஃது ஏலாதாய் முடியும். முடியவே, அவ்வுரை செய்தாரையே அறிவிலியென இகழ்வர். அவ்வுலகரைப் பொருணெறி புகட்டுவான் எழுந்த பெருங் கருணைத் திறத்தால் அவரை வஞ்சித்துக்கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறுவும் பான்மைபற்றி ஆசிரியர் இங்ஙனம் இல்லது இனியது நல்லது என நாட்டி நின்றார் என்க. இதனையே பாயிரத்துள்ளும் பாயிர ஆசிரியர் குறிப்பாகக் காட்டிப் போந்தனரென அறிக.

இனி, இதனானே இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம்' எனல் ஆசிரியர் நக்கீரருக்கும் கருத்தன்றென்க. என்னை? தொல்காப்பியனார் இதனை உலகியலின்மேல் வைத்து ஓதியிருப்பவும் இவர் அவர்க்கு மாறுகொள்ளக் கூறுவரோ? கூறாரென்க. எனவே பொருள்நெறிக்கண் எம்போலியராய பேதையரை உய்ப்பா னெண்ணி உரைத்த உரையாகவே கொள்க. இஃது என் போலவோ எனின் கடுத்தின்றுதானைக் கட்டிபூசிக் கடுத் தீற்றியவாறு போலும் கலங்கற் சின்னீர் தெருளாமையான் உண்பானை அருளுடையான் ஒருவன் பேய்த் தேரைக்காட்டி" உதுக்காணுய் நல்லதொரு நீர்தோன்றுகிறது. இச்சேற்றுநீர் பருகி என்செய்தி, என்று கொண்டு சென்று நன்னீர் ஊட்டி யது போலவும் என அறிக.

இதனானன்றே பாயிர ஆசிரியரும் இந்நூல் கேட்டார் இன்றெனவுரைத்தார். இந்நூலை மக்கள் போற்றல் வேண்டும் என்ற பெருவிழைவால் இதனிடத்து இறைமைத்தன்மை நாட்டினர். தொல்காப்பியப் பொருளதிகாரம் மக்களிடை மீண்டும் நிலவுதல் வேண்டுமென்ற கருத்தால் 'இல்லது இனியது நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்டதோ ரொழுக்கமெனக் காட்டினர்.

## 13. என்மனார் விளக்கம்

"இதனை முதல் நூலென்று புகுந்தமையாற் கந்தருவ வழக்கம் என்றே மொழியற் பாற்று. 'என்மனார்' என்று சொல்லற்பாற்று அன்று. அதுவழிநூல் வாய்பாடாகலான் என்பதுகடா. அதற்கு விடை பிறநூலெல்லாம் ஆசிரியப் பகுதிப்படும். இதுவும் அவையேபோல ஆசிரியப் பகுதிப் படுங் கொல்லோ எனின் படாது. கந்தருவ வழக்கம் போல்வது களவாதல் மூன்று காலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தமையால் அவ்வகை சொன்னான் என்பது.

"ஆஃதேயெனின், தன்னையொத்த புலவரில்லை யன்றே! தான் தலைவனாகலான், எல்லா முணர்ந்தானாகலான் எனின் அஃதே கருத்து, அறிந்திலை. தன்னானே உரைக்கப்பட்ட தெனினும் பிறவற்றை எல்லாம திரியவும் திரியாமையுங் கொண்டார். இதனைத்திரியாமையே கொண்டார் எல்லாரும் என்றற்கு அவ்வாறுரைக்கப்பட்டது, தன்மதம் உணர்ந்தா ரையும் புலவரென்றான் அறிபொருளுக்கு ஏனோரும் புலவ ராகலின்."

என்றுரைத்தனரே யெனினும் 'என்மனார்' என்பது வழி நூல் வாய்பாடேயாய் நிற்குமென்க. என்னை? இவ்வொழுக் கமும் இந்நூற் பொருளும் தொன்று தொட்டே ஏனோரும் அறிபொருளே ஆகிநிற்றலானும் இவ்வொழுகலாறுகட்

கிலக்கண முரைக்கும் இந்நூலும் முதல் நூலாகாது ஏனைய நூற்களு மிருந்தமையான், வழிநூலே ஆகிநிற்கும் பெற்றி யானும் என்க. அன்றியும் இந்நூற்கு விளக்கங்காணத் தொல்காப்பிய நன்நூலின் துணை வேண்டப்படுதலானும் இதனை முதல் நூலென்றல் போலியுரை என்க. ஆயினும் மன்பதைகளின் மருட்சி நீக்கி மன்றுள் நடம் செய்யும் மாமணியின் திருநெறி சேர்ப்பான் புகுந்தாராகலின் அதற் கியைபுற இங்ஙனம் ஓதினரென வுணர்க. எனவே இவ்வுரைக்கண் வடுக்காண்டல் ஏதமாய் முடியும். இக் கருத்துக் கொண்டே இவ்வுரை ஏலாத தென்றது ஈண் டைக்குச் சாலச்சிறந்த தென்க. என்னை, இவ்வாறு படைத்து மொழிந்தமையாற் பொய்யுரைத்தவாரும் பிறவெனின் அற்றன்று, என்னை, அதனாற் பழியும் பாவமும் படாது அறனும் அருளும் பயத்தலான். அதனாலன்றே

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்.

### 14 என்மனார்—இலக்கண விளக்கம்

"இனி 'என்மனார்' என்பது 'என்ப' என்னும் முற்றுச் சொல் 'குறைக்கும் வழிக்குறைத்தல்' என்பதனால் பகரம் குறைத்து 'விரிக்கும் வழிவிரித்தல்' என்பதனால் 'மன்' 'ஆர்' என்பன இரண்டு இடைச்சொற்பெய்து விரித்து என்மனார் என்றாயிற்று" என்பர்.

இனி, சிவஞான முனிவர் தமது சிவஞான பாடியத்துள் 'என்மனார்' என்பது செய்யுள் முடிபாயதோர் ஆர் ஈற்று முற்றுச்சொல் மன் எதிர்கால இடைநிலை. அது 'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' எனனும் சூத்திரத்துச் சேனா வரையர் உரையானும்" என்பர்.

ஈண்டு உணர்த்தப்பட்ட சேனாவரையர் களவியலுரை யாசிரியர் அடியொழுகி யுரைத்த உரையாசிரியரை மறுக்கும் முகத்தான் தரும் விளக்கம் சாலச்சிறந்தது. அஃது உரையா சிரியரின் உட்கிடையை யன்றி அவர்க்கு முன்னரமைந்த களவியலுரையாசிரியர் உள்ளத்தைத் தெள்ளிதிற் புலப்படுத்துவது. என்னை? களவியலுரையாசிரியர் உரை யையே உரையாசிரியரும் பின்னர் உரைத்தனராகலான். சேனாவரையர் தரும் விளக்கம் யாம் களவியலுரையாசிரியர்க் குத்தந்த விளக்கத்தைத் துணைசெய்வது. ஆதலின் அதனை ஈண்டுத்தருதும்

"என்மனார் என்பது செய்யுள் முடிபெய்தி நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச்சொல். என்றிசினோர், கண்டிசி னோர் முதலாயின அவ்வாறு வந்த இறந்த கால முற்றுச்

சென்ற இதழின் தொடர்ச்சி

# வள்ளுவரும் கண்ணோட்டமும்

S. ராஜு செட்டியார் B.A., B.L.,

## ஒறுத்தாற்றும் பண்பினரும் கண்ணோட்டமும்

"ஒறுத்தாற்றும் பண்பினர்" என்ற குறளிலே கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே என்பதற்குக் 'கண்ணோட்டம் உடையராய் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே' என எளிய உரைகண்டு அழகர் தவறுகிறார்; 'கண்ணோடிப் பொறுத்துச் செய்யும் குணமே' என அதற்கு எளிய உரைகண்டு குடவரும் தவறுகிறார். இவற்றால் இவ்விருவரும் கண்ணோட்டம் என்பது பொறையுடைமையாகும் எனக் கருதிவிட்டனர் என்பதை அறியலாம். அதிகாரத்தின் முதலில்கண்ட முன்னுரையிலே 'குற்றம் செய்தாரைப் பொறுத்தலும்' வேண்டும் எனக் குடவர் கூறுவது அதனை வலியுறுத்துகிறது.

## நல்ல நீதி முறை

"ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும்" என்ற குறளும் 'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர்' என்ற குறளும் நீதிவழங்கும் கடமை பூண்டுநிற்கும் அரசன் எத்தகைய அமைதியோடு மனநிலையோடு விசாரணையில் ஈடுபட வேண்டும் என்பதை விளக்க எழுந்த குறள்களாம். "மன்னா உன் பகை அரசன் உன்கையில் சிக்கிக்கொண்டான், அவன் உனக்கும் உன் நாட்டிற்கும் உன் நாட்டு மக்களுக்கும் செய்த ஓயாத தீவினைகளையும் தொல்லைகளையும் மாத்திரம் மனத்தில் வைத்துக்

---

சொல். 'என்ப' என்னும் முற்றுச் சொல்லினதுபகரம் குறைத்து மன்னும் ஆரும் என இரண்டிடைச் சொல் பெய்து விரித்தாரென்றுரை யாசிரியர் கூறினாராலெனின், என்மனார் என்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது நூலுள்ளுஞ் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும் இசைநிறை என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறை என்றல் மேற்கோள் மலைவாதலானும் அவர்க்கது கருத்தன்றென்க. மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணர வைத்தல் அவர்க்கியல் பாகலான் செய்யுள் முடிபென்பது கூறாராயினர்."

யாமும், கந்தருவ வழக்கத்தின் கண்ணும் வழிநூல் வாய்பாட்டின் கண்ணும் உய்த்துணர வைக்கும் களவியலுரையாசிரியர் திறத்தை நன்கு எடுத்துக்காட்டினேம். ஈண்டு சேனாவரையர் உரையானும் அக்கருத்து நன்கு வெளிப்படல் காண்க.

கொண்டு, ஓராதும் தக்காங்கு நாடாதும் அவனைக் குற்றவாளி எனத் துணிந்துவிடாதே. அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு, அதாவது அவற்றை மனத்தில் வைத்துக் கொள்ளாமல், அதாவது அவன் செய்த குற்றங்களையும் தந்த தொல்லைகளையும் மறந்துவிட்டு, செம்மனத்தோடு—சமநிலையோடு—நடுநிலைமையோடு—அவன் இப்பொழுது செய்துள்ள குற்றத்தை ஆராய முயல்வாயாக" எனப் பணிக்கின்ருர் வள்ளுவர்.

குற்றங்களை ஆராய முற்படும் அரசன், தனக்கு இடையருது துன்பம் விளைத்துவரும் பகைவர்களது குற்றங்களை ஆராய்வதாயினும் சரி, சமநிலை நடுவுநிலைமை என்ற மனநிலையோடு அவற்றை ஆராயத் தொடங்க வேண்டும் என்று கண்டோம். இத்தகைய மனநிலையின் அவசியத்தை "ஓர்ந்து கண்ணோடாது" என்ற குறளிலே இறைபுரிந்து என்ற தொடரால் வள்ளுவர் வலியுறுத்தி இருக்கிருர். இச்சமநிலை இல்லை என்ருல், குற்றவாளி பழகியவராயின் அப்பழகினுர் மேற்று அவ்வரசன் தாட்சணியம் காட்டுவான். அதனுல் அரசன் நீதி தவறுவான், அத்தவறு நிகழாது இருக்கவே "கண்ணோடாது" என்ற தொடரினை வள்ளுவர் பயின்றிருக்கிருர். கண் ஓடாது எனபதிலுள்ள கண்ணோட்டத்திற்குத் தாட்சணியம் எனபது பொருள். இங்குக் குறிப்பிட்ட சமநிலை இல்லை என்ருல், அரசன் முன் நிற்பவன் பகைவனுயின், கண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் கண்ட கண்ணோட்டத்தினைச் செய்யாமல் அரசன் அறம் பிழைப்பான்.

## இறைபுரிதலும் யார்மாட்டும்

கொடுமைபல புரிந்து தீராத்துன்பம் விளைத்துவரும் பெரும் பகைவனே எதிர் நிற்கின்ருன் என்ருலும் அப்போதும் நடுவுநிலைமை தவறுதல் கூடாது என்பதை வலியுறுத்தவே 'இறைபுரிந்து' என்ற தொடரினையும், 'யார்மாட்டும்' என்ற தொடரினையும் அதே குறளில் வள்ளுவர் கருத்தோடு பயின்றிருக்கிருர்.

## பொறுத்தலும் ஆற்றலும்

பகை அரசனுடைய குற்றத்தை விசாரிக்கும் போதும், அவன் உனக்குப் பெரும் பகைவன் என்பதை மறந்துவிட்டு நீதி செலுத்து. உண்மைகாண்பது உன் கடன். கண்ணோட்டம் செலுத்த வேண்டியது உன்கடன். அவன் பகைவன் என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு நீதி செலுத்த முயல்வாயானுல், அறம் பிழைப்பாய்; மேலும் நீதியின் உயிர்நாடி போன்ற கண்ணோட்டம் என்ற பண்பு உன்தீர்ப்பில் இல்லாது போகும்," என்ற உண்மையை விளக்கித்தரவே "ஒறுத்தாற்றும்" என்ற குறளினை வகுத்தார்.

'கண்ணோடிப் பொறுத்தாற்றும்' என்பதைப் 'பொறுத்து' எனவும் 'கண்ணோடி ஆற்றும்' எனவும் பிரித்துக்கொள்ள வேண்டும். பலகாலும் ஒறுத்து ஒறுத்து எண்ணிப் பல தீமை செய்தவர்களையும்—ஒறுத்து நிற்பதையே தமது இயல் பாக்கிக் கொண்ட பகைவர்களையும்—விசாரிக்கும் போது, அவர்களது பகையை, தீய பண்பை, தீய இயல்பை, பொறுத்துக்கொண்டு செம்மனத்தோடு—நடுவுநிலைமையோடு—விசாரணையில் ஈடுபட்டு, அவர்கள் இப்பொழுது இழைத்த குற்றத்தின் உண்மையை ஐயம் திரிபு பகைமை அற உணர்ந்து, அதன்பின் அக்குற்றத்திற்கு ஏற்ற தண்டனையைக் கண்ணோட்டத்தோடு வகுத்து, நீதிநெறியின் தனித்தலைவனாக அரசன் விளங்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. மாசு மறுவற்ற நீதிமுறை, வளைதல் ஒடிதலற்ற நீதிமுறை தழைத்தோங்க வள்ளுவர் இக்குறளினை வகுத்துள்ளார்.

## எது நஞ்சு

'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர்' என்ற குறளை ஆராயலாம், நீதி செலுத்தும் நீதிபதி விசாரணையில் ஈடுபட்டு இருக்கும்போது. அவனை ஆட்டிவைப்பவர் சில பெருங்குற்றவாளிளும் அவர்களது துணைவர்களும், அவன் பதவிக்கு ஊறு தேடுவர். அவனுக்குச் சினமூட்டி அவனுடைய செம்மனத்தையும் நடுவுநிலைமையையும் அழிக்கப் பல வழிகளை நாடுவர். இன்னும் பலவற்றைச் செய்து அவனது செம்மனத்தையும் நடுவுநிலைமையையும் குலைத்து, அவனைச் சினத்திற்கும் அச்சத்திற்கும் பழிக்கும் நாணத்திற்கும் ஆளாக்கி, அவனது விசாரணையையும் முடிபையும் தண்டனையையும் பிழையுடையதாகக் காட்ட முயல்வர், நஞ்சனைய இவைகளை எல்லாம் பெய்வர், செய்வர், அறம் காத்து, அறம் வழங்கி, அறம் வளர்க்கும் கடன்மேற்கொண்ட நீதிபதி, இந்த நஞ்சானது செவி கைப்பது, உளம் கைப்பது என்றாலும். அதை முழுதும் தன் பொறுமையால் ஏற்றுத் தாங்கி, தன் செம்மனத்தை—சமநிலையை—நடுவுநிலைமையை—கைகோத்து நிலைக்கச் செய்வது, தன் கடனும். தக்காங்கு நாடுதலில் ஈடுபட்டாக வேண்டும் என்பதைப் 'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர்' என்ற இக் குறள் தெரிவிக்கின்றது.

நஞ்சு என்பது உயிரை அழிக்கும் நஞ்சா? சமநிலையை, நடுவுநிலைமையை, செம்மனத்தை அழிக்க முயல்வோரது இன்னாச் சொல், பொய்க்கூற்று, புறங்கூறும் சொல். அச்சுறுத்தும் சொல், சினமூட்டும் சொல், நாணம் பயக்கும் சொல், தீவினை முதலியனவா?

நயத்தக்க நாகரிகம் வேண்டுவோர் பண்பாடுடைய மக்கள். அப்பண்பாட்டினை வளர்த்துக் காட்டுவதற்கு முனைந்து நிற்கும் நீதிபதியினுடைய அழிவிலா, அசைவிலா

சமனிலையின் நற்பெற்றியை வெளிப்படுத்தி வளர்க்கு முகத் தான் பொருள்காணது, அப் பண்பாட்டினை அன்பின் காரண மாக அழித்துக் கொள்வர் என்று பொருள் காண்பதில் எவ் விதப் பொருத்தமோ சிறப்போ இல்லை.

### நஞ்சும் பொறையுடைமையும்

நஞ்சு உண்மை நஞ்சானல், நஞ்சுண்டு அழிதல் வேண்டும் என்பது இக்குறளின் பொருளானல், இக்குறள் பொறை யுடைமை என்ற அதிகாரத்தில் இடம்பெற வேண்டும்.

பழைமை என்ற அதிகாரத்திலே வரும்.

" அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர் "
" பேதைமைஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின் "

என்ற நட்புப் பற்றிய குறள்களை நினைவில் வைத்துக்கொண்டு, இக்குறளுக்கு உரைகண்டிருக்கிறனர் இவ்விருவரும் எனத் தெரிகிறது. இவர்கள்கண்ட உரை சரியானது என்றால், இக்குறள் கண்ணோட்டம் என்ற அதிகாரத்தில் இடம்பெறுதல் ஆகாது, பழைமை என்ற அதிகாரத்தில் இடம் பெறல் வேண்டும்.

### உருவக நஞ்சு

பயின்றார் தந்த நஞ்சுண்டு மீண்டும் அவரோடு நட்பு கொண்டு இருப்பது என்று அழகரும், நஞ்சு பெயக் கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர் எனக் குடவரும் பொருள் காண்கின்றனர். உயிரை அழிக்காத நஞ்சுதான் இங்குக் குறிக்கப்பட்ட நஞ்சு என்பது இவ்விருவரது கருத்தாயின், அந்நஞ்சு உருவக நஞ்சாக இருக்கவேண்டும் என அவர்கள் சிந்தித்து உணர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு உணர்ந்து இருந்தால், அவர்கள் வேறுவிதமாக இக்குறளுக்குப் பொருள் தந்திருப்பார்.

### தற்கொலை

'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்ற வள்ளுவர் வாக்கினைச் செவ்வனே உணரவேண்டும். அறம் வளர்க்க, அறத்துறையில் இன்பம் தோன்ற, பண்புடையோர் தம் இன்னுயிரையும் ஈவர் என்பது இதன் பொருள். தம் உயிரை ஈவதால், அறம் வளரும் அறத்துறையில் இன்பம் பெருகும் எனக்கருத முடியாதிருந்தும், நண்பர் தீய எண்ணத் துடன் நஞ்சூட்டித் தம் உயிரை மாய்த்துவிடப் பார்க்கின்ற னர் என அறிந்திருந்தும், அக்கயவர்கள் தரும் நஞ்சினை ஏற்று உண்டு அழிவதைத் தற்கொலை, என்றே கூற வேண்டும். அது அறமல்ல, நாகரிகமல்ல, கண்ணோட்ட மல்ல, இக்குறள் நண்பர்களுக்கு அல்ல, அல்ல, இவ்வதிகார

முழுமையும் அரசனுக்கும், நீதிபதிக்கும் உரிமை கொண்டாடு வோருக்குமாம்.

## நற்றிணையும் நஞ்சும்

வள்ளுவர் பயின்ற நஞ்சு உருவக நஞ்சு என்பதையும், அந்த நஞ்சானது கண்ணோட்டத்தின் நற்பெற்றியை—அதாவது அரசனது நீதிமுறையின் நற்பெற்றியை—நிலை நாட்ட எழுந்தது என்பதையும் அறியாது போனார் நற்றிணை ஆசிரியர் பெயக்கண்டு என்ற குறளிற்குத் தவறான பொருளைக் கண்ட நற்றிணை ஆசிரியர் தாம் கொண்ட பொருளே சிறந்தது என்று கருதி அப்பொருளை—அக்கருத்தை—மிகத் தெளிவு படுத்த வேண்டும் என்று எண்ணினர்.

தாம் கொண்ட கருத்தைச் சிறப்பிக்க நட்டோரை நுழைத்தன்றி வேறு வகையால் முடியாது எனக்கண்டார். ஆகவே நாட்டோர் கொடுப்பின் என்பதைத்துணிந்து நுழைத்து,

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"

எனப் பாடுவாராயினர்.

ஆராய்ச்சித் திறம்படைத்த அழகர் வள்ளுவரதுகுறளுக்கு நேரிய பொருள் காண முடியாதவாறு நற்றிணையின் இவ்வரிகளே மயக்கிவிட்டன எனக் கருதலாம். நஞ்சு, உண்டல், நாகரிகம் என்ற மூன்றும் குறளிலும் நற்றிணை வரிகளிலும் இருப்பதால், இவ்விரண்டும் ஒரு பொருளையே உணர்த்து கின்றன எனத் தவறாகத்துணிந்தார் அழகர். தன்னொடு பயின்றார் முன்புகண்டு பழகினர் என்ற தொடர்களை அழகரும் குடவரும் பயில்வதற்குக் காரணம் நற்றிணை வரியில் வரும் நட்டோர் என்ற சொல்லே ஆகும். சங்ககாலத்துப் புலவர்களும் வள்ளுவர் கருத்தினை வாங்கும் திறனிலாது இருந்தனர் என்பதற்கு இந்நற்றிணை வரிகளே ஒரு சான்றாகும்.

## அருளும் கண்ணோட்டமும்

இக்கண்ணோட்டம் அருளும் அல்ல. எல்லா உயிர்கள் மேலும் செல்லும் அன்பே அருள். உற்றார் நண்பர் என்பன போன்ற தொடர்பினைக் கருதாதும், நல்லவன் தீயவன் போன்ற காரணம் இன்றியும் நிகழ்வது அருள். சட்டதிட்டங் களிலும், அரசுபுரிவதிலும், நீதி செலுத்துவதிலும், உரிமை கொண்டாடுவதிலும் உள்ள அறிவின்மையை, அறமின்மையை, நீக்கி அமைக்கும் அறமே கண்ணோட்டம்.

## நலிவுகளும் மருந்தும்

வறுமை, இடுக்கண், இடர், சூழ்நிலை, ஊழ் முதலியவற் றால் நலிவோர்களுடைய நலிவைப் போக்க ஈகை விருந்

# வினையாலணையும் பெயர்

வித்வான், மோ. இசரயேல், எம். ஏ.
*தமிழ் ஆய்வுத் துறை சென்னைப் பல்கலைக் கழகம்.*

**முகவுரை :—**

வினைமுற்றே பெயராக வழங்குவது திராவிட மொழிகளில் காணும் சிறப்பியல்புகளுள் ஒன்று. வடிவில் (form) அவை முற்றிலும் வினைமுற்றே ; ஆனால் பயன் வகையில் (function) பெயரேயாகும். பெயரின் இயல்பு பெற்று இயங்கும் வினைமுற்றுக்களைத் தமிழ் மொழியில் வினையாலணையும் பெயர் என அழைப்பர். ஆனால் தொல்காப்பியனார் அவற்றைத் தொழிற் பெயர் எனவும் (தொல். சொல். *139*, *70*) வினைப்பெயர் எனவும் (சொல். *165*, *168*) அழைக்கின்றனர்.

## தொழிற் பெயரும் பெயரே

தொல்காப்பியனார் பெயருக்கு இலக்கணங் கூறுங்கால்

பெயர்நிலைக் கிளவி காலந்தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே (சொல். 70)

எனக் குறிப்பிடுகின்றார். இதற்கு நச்சினார்க்கினியர் "தொழிற் பெயர் ஒன்று அல்லாத பெயர்கள் காலங்காட்டா" என விளக்கம் தருகின்றனர். இவற்றினின்று தொழிற் பெயர், பெயரின் ஒரு தனிவகை என்பதும், மற்ற பெயர்கள் காலங்காட்டாத் தன்மை பெற்றிருப்பினும், தொழிற் பெயருக்குக் காலங்காட்டும் பண்பு உரியது என்பதும் தெளிவாகின்றன.

## தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும்

மேற்காட்டப்பட்டுள்ள நூற்பாவின் கீழ் எல்லா உரையாசிரியர்களும் தொழிற் பெயர் இருவகைத்து. ஒன்று காலந் தோன்றாத் தொழிற்பெயர் ; மற்றது காலந் தோன்றும்

---

தோம்பல் ஒப்புரவறிதல், அருள் முதலிய பேரறங்கள் உண்டு. ஆனால் சட்டதிட்டங்களிலும், ஆட்சிமுறையாலும் உரிமை கொண்டாடுவதாலும் நலிவோர்களது நலிவிலுள்ள கொடுமையைப்போக்கக் கண்ணோட்டம் என்ற ஒப்பரிய அறம் உண்டு.

**ஆதாரக் குறள்கள் :—**

(1) "தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து"

(2) "ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

(3) "உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்."

(4) "கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் உலகு."

தொழிற் பெயர் எனப் பகுத்துக் காட்டுகின்றனர். உண்டல், தின்றல் என்பன காலந் தோன்றாதன ; உண்டான், தின்றான் முதலியன காலந் தோன்றுவன. நன்னூலார் முன்னைய வற்றை வினையின் பெயர் (தொழிற் பெயர்) எனவும் பின்னைய வற்றை வினையாலணையும் பெயர் எனவும் (நன் 286, குறிப்பிடு கின்றார். இன்றைய இலக்கண நூல்கள் முன்னையவற்றைத் தொழிற் பெயர் எனவும் பின்னையவற்றை வினையாலணையும் பெயர் எனவும் அழைக்கின்றன. ஆனால் தொல்காப்பியனார் இவை இரண்டையும் ஒன்றாக அடக்கித் தொழிற் பெயர் எனக் குறிப்பிட்டனர் என்பதும், அவர் தொழிற் பெயர் காலங் காட்டும் என்கின்றமையால் அச்சொல் அவர் காலத்தில் வினை யாலணையும் பெயருக்கே சிறப்பாக வழங்கப்பட்டது எனவும் கருத இடமுண்டு.

தொழிற் பெயரும், வினையாலணையும் பெயரும் வினையின் அடியாகப் பிறப்பன ஆயினும் தொழிற் பெயர் படர்க்கையில் மட்டும் வழங்குதலையும் வினையாலணையும் பெயர் மூவிடத்திலும் வழங்குதலையும் நன்னூலார்

> வினையின் பெயரே படர்க்கை ; வினையா
> லணையும் பெயரே யாண்டு மாகும் (நன். 286)

என்னும் பாவால் தெளிவு படுத்தி உள்ளார். பெரும்பாலும் தொழிற் பெயர் காலங்காட்டுவதில்லை ; ஆனால் வினையாலணை யும் பெயர் காலங்காட்டும். மேலும் தொழிற் பெயர் தொழிலை மட்டும் குறிக்க, மற்றது தொழிலையும் செய்தவனையும் குறித்து நிற்கும்.

## தொழில் நிலை ஒட்டு

வினையாலணையும் பெயர் வடிவில் முற்றிலும் வினைமுற்றை ஒத்துள்ளது. எனவேதான் தொல்காப்பியனார் அதனைத் "தொழில் நிலை ஒட்டு" என்னும் சொற்றொடரால் குறிப்பிடு கின்றார். அதற்குச் சேனாவரையர் "உண்டான், தின்றான் என்னுந் தொடர்கத்துப் பகுத்துச் சொல்லப்படும் தொழிற் பெயர், வினைச்சொல் போலத் திணையும் பாலும் காலமும் முதலாயினவற்றை விளக்கி, அன், ஆன் முதலாகிய ஈற்றவாய் வருதலின் "தொழில் நிலை யொட்டும்" என்று ஆசிரியர் கூறி னார்" என விளக்கம் தருகிறார்.

## வினைமுற்றும் வினையாலணையும் பெயரும்

வினைமுற்றும் வினையாலணையும் பெயரும் வடிவத்திலும் (form) அமைப்பிலும் (structure) ஒத்தவையாகும்.

எ–டு அவன் உண்டான் (வினைமுற்று)

உண்டானைக் கண்டேன் (வினையாலணையும் பெயர்)

இரண்டும் வினைப்பகுதி (verbal stem) யுடன் காலம் அறிகிளவி (tense marker), இடமறி கிளவி (person marker) பாலறி கிளவி (number -gender marker) முதலியவற்றை ஏற்று நிற்கின்றன.

உண் + ட் (த்) + ஆ + ன் > உண்டான்.

சொற்றொடர் அளவில் நோக்குங்கால் வினையாலணையும் பெயர் வேற்றுமை உருபை (case marker) ஏற்று வருகின்றது. ஆனால் வினைமுற்று அதனை ஏற்பதில்லை. அவன் வந்து உண்டான்; உண்டு சென்றானைக் கண்டேன் என்னும் வாக்கியங்களில் வினையாலணையும் பெயரும், வினைமுற்றும் வினையெச்சத்தை ஏற்று வருகின்றன; ஆனால் வினையாலணையும் பெயர் எழுவாயாகப் பயன் (function) ஆற்றுகின்றது. வினைமுற்று பயனிலையாகவே நிற்கின்றது. வேற்றுமை உருபை ஏற்றலும், எழுவாயாக வருதலும் (தொல். சொல். 69, 65) பெயரின் தன்மைகளாம். பெயர் பயனிலையாக வருதலும் உண்டு (தொல். சொல். 66). வினையாலணையும் பெயரும் பயனிலையாகச் செயலாற்றுகின்றது என்பதை செக் நாட்டறிஞர் ஒருவர் தெளிவுபடுத்தி உள்ளார்[1].

எ–டு அன்னை செல்கென்றனளே (நற். 53·11,)
ஆயிழை வருவோள் (நற். 308,3)

எனவே வினை அடியைப் பெற்று, காலம் ஏற்று, வினையெச்சம் முற்கொண்டு அமைவதில் வினையாலணையும் பெயர் வினைமுற்றை யொக்குமாயினும், வேற்றுமை உருபை ஏற்றும், விளி ஏற்றும் (தொல். சொல். 133, 139), எழுவாயாக நின்று பயனிலை ஏற்றும் பெயராகச் செயல் புரிகின்றது. இதனின்று தமிழ் மொழியின் சொல்வகையைப் (Parts of speech) பகுப்பதில் அவற்றின் வடிவத்தை மட்டும் கவனித்தால் போதாது; சொற்றொடரளவில் (syntactic level) அவற்றின் பயன்வகையையும் (function) கவனித்தல் வேண்டும் என்பது தெளிவு.

**அமைப்பு — வினையாலணையும் பெயர்** (structure)

டாக்டர் கால்டுவெல் ஐயர் அவர்கள் "இவ்வினையாலணையும் பெயர்கள், சுட்டுப் பெயர்கள் அல்லது அவற்றின் விகுதிகளை நிகழ் கால இறந்த காலப் பெயரெச்சங்களோடு இணைப்பதால் பிறக்கின்றன" என்கிறார்[2]. எ–டு செய் என்கிற வினையின் நிகழ்காலப் பெயரெச்ச வடிவாகிய செய்கிற என்பதிலிருந்து "செய்கிறவன்", செய்கிறவள் என்ற வினையாலணையும் பெயர்களும் செய்த என்னும் இறந்த காலப் பெயரெச்சத்தினின்று "செய்தவன்," "செய்தவள்" என்னும் வினையாலணையும் பெயர்களும் பிறத்தல் காண்க. இங்ஙனம் வினையாலணையும் பெயரைத் தோற்றுவிப்பது படர்க்கை இடத்தில்

1. Dr. Kamil Zvelebil — Participial and Verbal Nouns Tamil Culture Vol VIII No. 3/1959 Page. 183,3
2. Dr. Caldwell — Camparitive Grammar of Dravidian Languages (1961) Page. 540

மட்டும், இறப்பு நிகழ்வு ஆகிய காலங்களில் உள்ளவற்றிற்கே இயலும் என்று அவரே ஒப்புக் கொள்ளுகிறார். செய்த + அவன்/அன் என்று அமையும்போது இடையில் வரும் பெயரெச்சக் குறி (relative participle marker) அகரம் தேவையற்றதாகும் மேலும் "வருபவன்" போன்ற எதிர்கால வினையாலணையும் பெயர்களும், "வந்தேன்," "வந்தாய்" என்பன போன்ற முக்காலத் தன்மை முன்னிலை வினையாலணை யும் பெயர்களும் அங்ஙனம் விளக்கம் தருதற்கு அமையாது போய்விடுகின்றன. ஏனெனில் "செய்யும்" என்பது போன்ற எதிர்கால வினையெச்சத்தோடு அன்/அவன் இணை வது மிக அருமை. தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர் ஆக்கத்திற்குச் சுட்டுப் பெயர் துணைபுரிவதில்லை. எனவே அவர் கூற்று பொருத்தம் அற்றதாகும். அவருக்குப் பிற்காலத்தவராம் எல். வி. இராமசாமி ஐயர் அவர்கள் வினை யாலணையும் பெயர்கள் வினையெச்சத்தோடு இடப்பெயர் விகுதிகளை (personal terminations) இணைப்பதால் ஆக்கப்படு கின்றன என்கிறார்[3]. இதிலும் வினையெச்சக் குறிகள் (verbal participle marker) அமையும் வகை தெளிவாக்கப்படவில்லை; எதிர்கால வினையாலணையும் பெயர்க்கும் வழி கூறப்பட வில்லை. எனவே இதுவும் பொருந்தவில்லை.

விளக்க இலக்கணப்படி (descriptive grammar) வினையா லணையும் பெயரில் வினைமுற்றில் அமைந்துள்ள பகுதி, கால மறி கிளவி, இடமறி கிளவி, பாலறி கிளவி ஆகிய அதே உருபன்கள் (morphemes) அமைந்துள்ளன என்பதுவே மிக எளிமையும் பொருத்தமும் ஆகும்.

**அமைப்பு முறை (structural types) வகைகள்**

1. வருவான் — —ஆன் — —ஆ—
2. வருபவன் — —அவன் — —அவ—
3. வருவோன் — —ஓன் — —ஓ—

—ஆ— = —அவ— = —ஓ— இவை மூன்றும் படர்க்கை

இடமறி கிளவிகள் (Third person markers) ஆகும் ஒரே பொருள் உடையவை. —ஆ—, —ஓ—வாதலைத் தொல்காப் பியமே (தொல். சொல். 211, 195) ஒப்புக் கொள்ளுகின்றது. டாக்டர் கால்டுவெல் அவர்கள் —ஆன் என்பது அவன் என் பதின் சிதைந்த உருவமே என்றும், கூ—வ்—அ—ன் என்ப தில் இரண்டு உயிர்கள் இணைவதால் —ஓ— தோன்றுகிறது என்றும் கருதுகின்றார் (திராவிட மொழிகளின் ஒப்பிலக் கணம், பக். 225) பின்னையதை ஒப்புக் கொள்ளுதல் அரிதா யினும், முன்னையதை மறுத்தல் இயலாது. என்றாலும், —அவ— > —ஆ— > —ஓ— என்று வழங்கி இருத்தல் இய லும் என்று கருத முடியும்.

3. L. V. Ramasamy Ayer—Collected pepers Vol. II Page. 69

## வினையாலணையும் பெயரும் ஒலி அழுத்தமும் (stress/accent)

நச்சினார்க்கினியர் "உண்டான் என்பது போன்று காலந் தோன்றி வினை முதல் மேனின்ற படுத்தல் ஓசையான் ஆம் தொழிற் பெயர் ஒன்று" என்று குறிப்பிடுவதினின்று, அவர் அதனை வினைமுற்றினின்று வேறுபடுகின்றது ஓசை எனக் கருதினர் போலும். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் "ஓடுவான் என்ற சொல் வினைமுற்றாயிருக்கும்போது முதலசையில் எடுத்தல் ஓசையும், அதுவே வினையாலணையும் பெயராக நிற்கும்போது ஈற்றசை பாலுணர்த்தும் சிறப்பால் அதன்கண் எடுத்தல் ஓசையும் அமைந்திருத்தல் காண்க" என்று கூறுகின்றார் (மொழி நூல், பக். 71) டாக்டர் சதாசிவம் அவர்களும் வினைமுற்றில் எடுத்தலோசை முதலசையிலும் வினையாலணையும் பெயரில் ஈற்றசையிலும் உள்ளது என்று குறிப்பிடுகிறார்[4]. அவர்களே தற்காலத் தமிழில் எடுத்தல் ஓசை (stress) ஒலியளவில் (phonetic) தான் அமைந்துள்ளது என்றும் குறிப்பிடுகிறார். எனவே வினையாலணையும் பெயரில் எடுத்தலோசை இறுதியில் தோன்றினும், அதுவே அதனை வினைமுற்றினின்று வேறுபடுத்திக் காட்டுவதில்லை. வேறுபாடு சொற்றொடர் அளவிலே (syntactic level) அறியப்படுகின்றது. மேலும் தமிழ் மொழியில், சொற்களின் பொருளை வேறு பகுக்கும் உண்மை ஒலியழுத்தத்திற்கு (stress) உண்டா இல்லையா என்பது இன்னும் ஆராய வேண்டியுள்ளது.

### தெரிநிலையும் குறிப்பும்

தெய்வச்சிலையார் இருவகையான வினையாலணையும் பெயர்களைக் குறிபபிட்டுள்ளார். தெரிநிலை வினையொட்டுப் பெயர் ஒன்று; குறிப்பு வினையொட்டுப் பெயர் மற்றது. முன்னையது காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது; பின்னையது குறிப்பாகக் காட்டுவது.

எ–டு

| தெரிநிலை | குறிப்பு |
|---|---|
| உண்டவன் | நல்லவன் |
| உண்டான் | நல்லான் |
| உண்டோன் | நல்லோன் |

### முடிவுரை

தற்காலத் தமிழில் உண்டான், உண்டோன், நல்லான், நல்லோன் என்பவை போன்ற வினையாலணையும் பெயர்கள் வழக்கில் இல்லை. உண்டவன், நல்லவன் போன்றவையே உள்ளன. மேலும் தன்மை முன்னிலை இடங்களில் தற்காலத்தில் வினையாலணையும் பெயர்களை வழங்குவது இல்லை. படர்க்கையில் மட்டும் இன்றும் வழங்கி வருகின்றது.

4. D. A. Sathasivam — தெ. பொ. மீ. மணிமலர்

# வைப்புமுறையும் பகுப்பும்

வித்துவான். நடேசநாராயணன்

**வைப்பு முறை :**

இயல் இசை நாடகம் ஆகிய மூன்று தாம் முத்தமிழ் என்று அனைவரும் அறிவோம். அதில் இயலை முதலாவதாக வும் இசையை இரண்டாவதாகவும் நாடகத்தை மூன்ருவதாக வும் முறைப்படுத்தி வைத்திருக்கின்றனர். இந்த வைப்பு முறையே பொருந்தக் கூடியது என்று பலரும் கருதுகின்றனர். முத்தமிழின் பிறப்பினை நோக்குங்கால் இந்த வைப்பு முறை பொருத்தமன்று என்பது தெளிவாகின்றது.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அழுகிறதே யொழியப் பேசத் தொடங்குவதில்லை. அந்த அழுகையின் ஒலிதான் இசைக்கு அடிப்படை. அந்த ஒலியின் பல்வேறு மாற்றங்கள் தாம் இசையாக உருவாயின.

முதலில் ஒலிகளால் ஆன பண்கள் (இராகங்கள்) மட்டுமே தோன்றின. பின்பே அந்த ஒலிகளோடு கருத்துக்களை வெளிப்படுத்தும் பாடல்களும் இடம் பெற்றன. எடுத்துக் காட்டாக ஏழில் (நாகசுரம்) புல்லாங்குழல் முதலிய இசைக் கருவிகளிலிருந்து பிறக்கும் வெறும் ஒலிகள் மட்டும்கூட இன் றும் இசையெனப் போற்றப்படுவது காண்க. இதனல் இசையே பிறப்பால் முதன்மை யுடையது என்பதை அறிய லாம்.

அடுத்து, அழுகிற குழந்தை உடனே பேசி விடுவதில்லை. கை கால்களை அசைக்கின்றது. கண்ணை மூடித் திறக்கின்றது. ஊமையைப் போலச் சைகையைக் காட்டுகின்றது. இந்தச் சைகையே காலப் போக்கில் மெய்ப் பாடகி (அபிநயமாகி) அப்பால் நடனமாகிப் பிறகு கூத்தாகி இறுதியில் நாடகமாக உருவாயிற்று. இதனல் நாடகம் பிறப்பால் இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது என்பதை அறியலாம். இதற்கு மற்ருெரு சான்றும் உள்ளது, இசையைக் கேட்டு (லயித்து)த் தன்னை மறந்த நிலையில் மனிதன் சில மெய்ப்பாடுகளை வெளிப் படுத்துகின்ருன். அந்த மெய்ப்பாடுகளே காலப் போக்கில் நடனமாகிப் பிறகு கூத்தாகி அப்பால் நாடகமாயிற்று. அத ஞல் இசைக்கு அடுத்தபடியாக நாடகத்தையே வைக்க வேண்டும்.

மூன்ருவதாகத்தான் இயலை வைக்க வேண்டும். முதலில் குழந்தை அழுகிறது. பிறகு வளர வளர சைகைகளைக் காட்டு கிறது. அப்பால் மழலை பேசுகிறது. அந்த மழலையே காலப்

போக்கில் இயலாக உருவாயிற்று. அதனால் இயல் பிறப்பால் மூன்றாவது இடத்தையே பெறுகின்றது என்பதை அறியலாம்.

எனவே இசை, நாடகம், இயல் என்பதே பொருத்தம் உடையது என்று அறியலாம். இவ்வாறிருக்க நம் தமிழ் அறிஞர்களுள் பெரும்பாலார் இயல் இசை நாடகம் என்ற வைப்பு முறையையே போற்றியதற்குப் பிறப்பு முறையன்றிச் சிறப்பு முறை காரணமாகலாம்.

பிறப்பால் இசைதான் முதலாவது எனினும் மூன்றாவதான இயலைக் கண்ட பிறகே முதலாவதான இசைக்கு இது இசை என்றும் இரண்டாவதான நாடகத்துக்கு இது நாடகம் என்றும் பெயரிட்டு வழங்கத் தொடங்கினர். பெயர் இல்லாமல் இருந்த இசையும் நாடகமும் இயல் தோன்றிய பிறகே பெயரைப் பெற்றன. இலக்கண விதிகளையும் பெற்றன.

இசையையும் நாடகத்தையும் சொல்லாமல் பெயரிட்டு இலக்கண அமைப்பால் வரம்பிட்டுத் தெளிவாக்கிய சிறப்பு, இயலையே சேரும். அத்துடனன்றி எக்கலையும் நூலாம் போது இயல் நிலையை எய்தியே நிலைக்க வேண்டியுள்ளது. எனவே இத்தகைய சிறப்புக் காரணங்களால், "சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்" என்ற உத்திக் கேற்ப முத்தமிழ் வைப்பு முறையில் இயல் முதல் இடத்தைப் பெற்றது அடுத்துப் பிறப்பை பொட்டி இசையும் நாடகமும் ஒன்றன் பின் ஒன்றாய் அமைந்தன.

**பகுப்பு :**

இனி இயற்றமிழை இயல் வேறு மொழி வேறு என்று கருதுவது தவறு. இயலே தமிழ்; தமிழே இயல்.

இயற் சீர் இயற் சொல் இயன் மொழி இயல் நூல் இயற்றோர் மரபியல் செய்யுளியல் என்ற தொடர்களில் வரும் 'இயல்' என்ற சொல்லும் இயற்றமிழ் என்ற தொடரில் வரும் 'இயல்' என்ற சொல்லும் வெவ்வேறு பொருளை உடையன. இயற்றமிழ் என்பதில் வரும் இயல் பிரிவு அல்லது இயலல் அல்லது இயற்கை என்ற பொருளைத் தருவதாக இல்லை அது மொழியின் தன்மையைக் குறிப்பதாக உள்ளது. அவ்வாறாயின் மொழி வேறு இயல் வேறு என்றாகின்றது. இது பொருந்துமா? ஒலியாகப் பிறக்கும் சொல்லே இயலின் கூறுதான். அந்தச் சொற்கள் இல்லாமல் இயல் உண்டா என்பது வினா?

எனவே இயல் என்பது பொதுவானது அது எல்லா மொழிக்கும் உரியது. எம்மொழியும் இயல் நிலையிலேயே மொழியாந் தன்மை அடைகின்றன. எனவே இயலை வேறாகவும் மொழியை வேறாகவும் கருதுவது மயக்கே.

இயல் உருவில் இருக்கும் தமிழானது இசையுடன் கூடி இசைத் தமிழாகிறது. நாடகத்துடன் கூடி நாடகத் தமிழாகின்றது. தமிழானது தன் நிலையினின்றும் வேறு இரண்டு நிலைக்கே தாவக் கூடியது என்பதை அறிய வேண்டும். ஆகவே தமிழ் தன்னிலையாகிய இயல் கூடியே முத்தமிழாகின்றதே யொழிய தன்னிலை வேருகவும் முத்தமிழ் வேருகவும் அது நிற்கவில்லை என்பது பெறப்படும்.

இயல் இல்லாமல் மொழி இருக்க முடியாது; அதாவது தமிழ் இருக்க முடியாது. ஆனல் இசை இல்லாமல் தமிழ் இருக்க முடியும். நாடகம் இல்லாமல் தமிழ் இருக்க முடியும். இதனல் இசையும் நாடகமும் மொழியினின்றும் பிரிந்து நிற்கும் கலைகள் என்பதை அறியலாம். ஆனல் இயல் என்பது கலையன்று. அதுவே மொழி. அதாவது இயலே தமிழ். இயல் என்பது மொழியின் பண்பைக் குறிக்கும் சொல்.

தமிழ் மொழி என்பதில் 'மொழி' பொதுச் சொல். 'தமிழ்' சிறப்புச் சொல். மொழி என்ற சொல் தமிழ்ச் சொல்லாயினும் அச்சொல்லின் பொருள் (மொழியும் நிலை) எம்மொழிக்கும் பொது. அதுபோன்றே 'இயல்' பொதுச் சொல் தமிழ் சிறப்புச் சொல்.

இயலானது இங்குத் தமிழ் மொழியின் தன்மையை விசேடிக்க வந்தமையால் அது தமிழோடு சார்த்திச் சொல்லப்படுவதாயிற்று. எனவே இயற்றமிழ் என்பது இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாம் என்க. அதே இலக்கணத்தை இசைத் தமிழ் நாடகத் தமிழ் என்ற தொடர்கட்கும் கொள்வது தவறு. இசையாகிய தமிழ் என்று ஒன்று இல்லை; நாடகமாகிய தமிழ் என்றும் ஒன்று இல்லை.

இசைத் தமிழ் நாடகத் தமிழ் என்பவை இயற்றமிழைப் போல இரு பெயரொட்டுப் பண்புத் தொகைகள் அல்ல. அவை, இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாம் அவை, இசையை உடைய தமிழ்; நாடகத்தை உடைய தமிழ் என விரியும்.

இக் கருத்தை நச்சினர்க்கினியர் (தொல். எழுத்து, 385) நூற்பாவில் "தமிழையுடைய கூத்து" என விளக்கினர். இதனல் தமிழ் வேறு நாடகம் வேறு என அறியலாம். ஆகவே தமிழையுடைய நாடகம் என்று கருதுவதே பொருத்தம்.

நச்சினர்க்கினியரின் கருத்தே உண்மை என்று தோன்றியதால் மேலேயான், இசைத் தமிழ் நாடகத் தமிழ் என்பவற்றுக்கு இசையை உடைய தமிழ், நாடகத்தை யுடைய தமிழ் என்று பொருள் கொண்டேன். அவ்வாறே இங்கும் தமிழிசை, தமிழக் கூத்து என்பவற்றுக்குத் தமிழையுடைய இசை,

# நீலமலைப் பழங்குடிமக்களும்—மொழியும்

வித்துவான். சி. கோவிந்தராசனார்,

பழம்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்

உலகத் தோற்றத்தில் மலையே முதற்கண் பெருவெள்ளத்தினின்றும் தோன்றிய இயற்கைப் பகுதியென்று மாநிலவளாக அறிவியல் ஆய்வாளர் கூறுவர். மலையும் மலைவளப் பகுதியும் நெருங்கிச்சேர்ந்த இயற்கையைத் தமிழ்மக்கள் குறிஞ்சி என்று கருத்துடன் குறித்தனர். தமிழகத்திலுள்ள குறிஞ்சி நிலங்களுள் நீலமலைப் பகுதியே வளம் மிக்கதாகும். நீலமலையின் மிகவுயர்ந்த கொடுமுடியாகிய தொட்டபெட்டா எண்ணாயிரத்து அறுநூற்றைம்பதடி உயரமுடையதாகும். இம் மலையின் இயற்கை அமைப்பினை உச்சி, உயர்மட்டநிலை (பீடபூமி) காடடர்ந்த சரிவு என்று பிரித்துவிடலாம். இவற்றைத் தொதுவர் மொழியில் முறையே பெட்டா, மந்து, வைந் என்றழைப்பர். தொதுவர், கோத்தர், குறும்பர், இருளர் என்னும் பழங்குடிமக்களே இம்மலையில் வாழும் தமிழகப் பழங்குடி மக்களாவர். நீலமலையின் உயர்மட்ட நிலையொன்றை தொதுவர் ஒத்தகமந்து (ஒற்றைக்கல் மந்து) என்றழைத்தனர்.

---

தமிழை உடைய கூத்து என்று பொருள் கொள்வதே நச்சினார்கினியர்க்கு உடன் பாடாகும் எனினும், பிற்கூறிய இரு தொடர்கட்குமட்டும் 'தமிழரது இசை' 'தமிழரது கூத்து' என ஆறன் தொகையாகப் பொருள் கோடலே மிகச் சிறந்ததாக அமையும் என்று கருதுகின்றேன்.

தமிழிசை, தமிழக் கூத்து என்பவற்றைத் 'தமிழரது இசை, தமிழரது கூத்து' எனக் கொள்ளின் 'தமிழ்' என்பது ஆகுபெயராய் அமைவது காணலாம். இவ்வாறு தமிழ் என்ற சொல் தமிழரைக் குறிக்கும்.

இதுகாறும் கூறியவற்றால் இயற்றமிழ் ஒன்றே 'இயலாகிய தமிழ்' எனப் பொருள் படுமாறு இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்றும் பிற இரண்டும் அவ்வாறு அமையா என்றும் அறியலாம்.

இசைத் தமிழ் நாடகத் தமிழ் என்ற தொடர்கள், தமிழானது இசையுடனும் நாடகத்துடனும் இணைவதால் உருவான தொடர்களாகக் கொள்ள வேண்டும். தமிழிசை தமிழக் கூத்து என்ற தொடர்களோ தமிழரால் மேற்கொள்ளப் பெற்றதால் உருவான தொடர்கள் என்று கொள்ள வேண்டும்.

இதனையே பிறர் உதகமண்டலம் என்றனர். ஆங்கிலேயர் உட்டக்கமண்ட் (Otacamund) என்றும், சுருக்கமாக ஊட்டி (Ooty) என்றும் கூறினர்.

தொதுவரைக் கோத்தர்கள் 'தொன்' என்று சுட்டுவதால் பழமை என்னும் பொருளுடைய தொல் என்னும் சொல்லடியாகப் பிறந்த தொல்லவர், தொன்னவர், தொதுவர் என்றாயிற்றென்பர். கோத்தரே தொதுவரைப் பற்றிப் பழமைபேசுவதால் நீலமலையின் முதுகுடிமக்கள் தொதுவரேயாவர். தொதுவரும் கோத்தரும் கொண்டுள்ள மொழியியல்பினையே தமிழின் பழைய வேர்ச்சொற்களை அறுதியிட்டுக் காணும் மொழியாராய்ச்சியாளர் வாய்ப்பாகக் கொண்டுள்ளனர்.

தொதுவர் மரக் கொம்புகளை வளைத்துக்கட்டி மேலே கோரைப் புல் வேய்ந்துள்ள பக்கச் சுவரில்லாத குடில்களில் வாழ்கின்றனர். இரட்டை மாட்டு வண்டிக் கூடுபோல தோற்றமளிக்கும் இக்குடில்களைத் தொதுவர் கோம்பை என்றழைப்பர்.

தொதுவர் பேசும்பொழுது ஷ், ஸ், ஹ் ஆகிய வடவெழுத்தொலிகள் சில சொற்களின் முதலொலியாகவும், சில சொற்களின் ஈற்றொலியாகவும் வருகின்றன. குளிர் நிறைந்த நிலப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் வாழும் மக்களின் மொழியியல்பும் இதனைப் போன்றதேயாகும். மொழியின் இயல்புக்குத் தட்ப வெப்பச் சூழலும் காரணமாதலின், குளிர் சூழ்ந்த நீலமலையின் மேல் வாழ்கின்ற தொதுவர் கோத்தர் ஆகியோரின் நாவெழுச்சியில், குளிரால் ஏற்படும் நடுக்கத்திடைப் பிறந்த சொற்களின் இயல்பும் இவ்வாறுமென்று கண்டுணரலாம்.

நீலமலைச் சரிவுகளில் உள்ளவை நாடுகளில் வாழும் மக்கள் கோத்தர் எனப்படுபவராவர். இவர்கள் மொழி கோமாந்த் என்பதாகும். அதற்கடுத்தாற்போல் நில மட்டத்தை நோக்கி அமைந்துள்ள காடு கரம்புகளாகிய பரவிய வெளிகளில் குறும்பர்கள் வாழ்கின்றனர், இவர்களோடு சார்புடைய படுகரும் இங்கேதான் மிகுதியாக வுள்ளனர். குறும்பர் பயிலும் மொழியில் பழங் கன்னட ஒலிகளும், படுகரின் மொழியில் பழைய மலையாள ஒலிகளும் இணைந்தே காணப்படுகின்றன. எனவே, இவர்கள் தொதுவர் கோத்தர் போன்ற பழங்குடி மக்களல்லர் என்பது தெளிவாகின்றது.

தொதுவர், கோத்தர், குறும்பர், படுகர் ஆகியோரைத் தவிர, நீலமலைப் பகுதியில் இருளர், முடுகர், மலசர், ஊராளி, பணியர் சோலையர், என்னும் பிரிவினரும் படிப்படியாக அமைந்துள்ள மலைப் பகுதிகளிலும், வெளிகளிலும் வாழ்கின்ற

னர். இவர்கள் பேசும் மொழிகளில் தமிழின் ஒலிக் குறிப்புக்கள் வேறுபடினும் வேர்ச் சொற்கள் (Root Wards) தமிழின் சுவட்டிலேயே அமைந்துள்ளன.

தொதுவரும் கோத்தரும் வாழ்கின்ற மலைப் பகுதிகளுக்கேற்ப, கோமாந்த், கரியாமாந்த், பாய் கரைமாந்த் என்னும் பெயர்களைப் பெற்றுள்ளனர்.

நீலமலையின் கொடுமுடிகளைச் சார்ந்த மலைமட்ட நிலைப் பகுதிகளில் ஒன்றாகவுள்ளதும் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் நிறைந்ததுமாகிய கொலக் கொம்பை என்னும் மலை நாட்டில் நிலைத்து, சில தலைமுறையாக வாழ்ந்து வரும் குடும்பத்தைச் சார்ந்தவரும், தொதுவர் கோத்தர், குறும்பர் ஆகிய தொல்குடி மக்களின் மொழியைப் பிழையின்றி இயல்பாகப் பேசிவருபவருமான தமிழன்பர். திரு. சி. கிருட்டிணையா என்பவர், தமது அனுபவத் திறனைக் கொண்டு, இருபது ஆண்டுகட்கு முன்னர் எழுதியதுடன், பழமை மாறாத தொதுவர் கோத்தர் ஆகியவருள் மொழித்திறனுடையாரைக் கொண்டு வினவி ஒப்புப்பார்த்து இயன்ற அளவு மூவிடப் பெயர், முறைப் பெயர், சினைப் பெயர் பொருட் பெயர், காலப் பெயர், இடப் பெயர், பொருட் பெயர் ஆகியவற்றுடன் வினைப் பெயர்களையும் கூட்டி இரண்டாயிரம் சொற்களுக்கு மேலாக எழுதி உதவினார்கள்.

இன்று, அரசியலாரின் முயற்சியாலும், புதுமை நாகரிகச் சூழலாலும் இப்பழங்குடி மக்கள், அடிவாரத்திலுள்ள ஊர்களுக்கு வந்து நாகரிக மக்களுடன் பண்ட மாற்றுத் துறையில் பழகிச் செல்வதால், நடை உடை பேச்சில் நாளும் மாறுபட்டு வரும் நிலை பெருகி யுள்ளது. குறிப்பாக, திரைப்படக் காட்சிகட்கும் விடாது இம்மக்கள் வருகின்றார்கள் என்றால் அவர்கள் பின்பற்றி மாறுபாடடையும் விரைவை என்னென்பது! எனவே, பழமை மறைந்து புதுமையின் கோலம் மிகுந்தபின் சொல்லும் பொருளும் மாறுபடக் கூறும். வருங்காலத்தில் இம்முது குடி மக்களைக் கண்டு மொழித் துறையில் ஆராய்ச்சி செய்ய முற்படின் மிகவும் நிலைமாறிய சொற்களையே கேட்டற்காம். ஆதலின், தமிழ் மொழியின் வேர்ச் சொற்களை ஆராயும் நோக்குடைய அன்பர்கட்கு ஒரோருகால் பயன் பெறும் என்னும் நோக்குடன், தொதுவர் கோத்தர் மொழிகளிலுள்ள சொற்களைப் பாகுபடுத்தி வெளியிடலானேன்.

## தொதுவர் மொழி—(கரியாமந்த்)

அவ்வுவை = தாய்
அண் = அண்ணன்
அக்கிள் = அக்காள்
அயிண்ணு = மைத்துனன்
ஆள் (ஆள்ள்) கணவன்
எம் மேய்ன் மேய்ன் = மகன் வழிப் பேரன்
எம் மீண் மீண் = மகன் வழிப் பேரன்
எம் மேய்ன் மோள் = மகன் வழிப் பேத்தி
எம் மோள் மேய்ன் = மகள் வழிப் பேரன்
எம் மோள் மீண் = மகள்வழிப் பேரன்
எம் மோள் மோள் = மகள் வழிப் பேத்தி
ஐண் = தந்தை
ஐன்ம் = மக்கள் கூட்டம் (பெரியவர்கள்)
ஔவ் = தாய்
கடாஸ் = தங்கை
கண்மொக் = ஆண் குழந்தை
கண் மொக்குள் = ஆண்கள்
கராள் = தம்பி
கவுட் = குறும்பன்
கள் = கள்ளன்
குடும்ம் = குடும்பம்
குனுள் = சிறியவர்
கோ = கோத்தன்
கோக்கலாள்குன் = ஊரவர்
கோட்டாள் = நண்பன்
தெவ்ர் = தெய்வம்
தொடாள் = பெரியவர்
நாங்கிள் = நாவிதன்
பெட் = மனைவி
பெம்மொக் = பெண் குழந்தை
பெம்மொக்குள் = பெண் குழந்தைகள்
பெர்த்வோள் = உடன் பிறந்தவள்
பெர்த்வோன் = உடன் பிறந்தவன்
மாமின் = மாமன்
மேய்ண் (மீண்) = மகன்
மீண் மொக் / மேய்ன் மொக் = பெயரன் (பொது)
மோள் மொக் = பெயர்த்தி
மீண் பெட் / மேய்ண் பெட் = மருமகள்
மோளாளன் = மருமகன்
மன் சின் = மனிதன்
மைவ் = படுகர்
மளாள்காரின் = மலையாளி

(தொடரும்)

# ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

**சோழ வீரன் :—** [வந்து வணங்கி]
கவியரசே! சிறியேன்என் வணக்கம். தங்கள்
கட்டளையைத் தலைமேற்கொண் டினிது செய்வேன் (278)

**இரும்பிடர்த்தலையார் :—**
கருத்தோடு யான்கூறும் பணியைச் செய்து
கடைக்கூட்டுந் திறனுனக்கே உண்டென் றெண்ணி
வருத்தியுளேன் ...... ...... ......

**சோழவீரன் :—** (மகிழ்ந்து)
...... ...... பேறுடையேன் விரைந்தே வுங்கள்!
திருத்தமிகத் தங்களுளம் உவக்கு மாறு
செய்துவந்தும் திருவடியைப் பணிந்து நிற்பேன்

**இரும்பிடர்த்தலையார் :—**
உருத்துவரும் காவிரியின் வெள்ளத்தின்மேல்
உவப்பாலே ஆட்டனத்தி நீந்திச் செல்வான் (279)
நீந்துவதில் வல்லவன்றான் அவன்—ஆனாலும்
நிலைதடுமாறிப்போய்விட்டாலோ ; நீமுன்
போந்தவனை இடரின்றிக் காத்தல் வேண்டும்!

**சோழவீரன் :**
தீந்தமிழின் பெரியோய்!அவ் வாறே செய்வேன்
செல்கின்றேன் வணக்கம் ...... ......

**இரும்பிடர்த்தலையார் :—**
...... ஆம் வெற்றி ஆக!
(வீரன் சென்றபின் தனியே)
வேந்தனிடம் உண்மையினை இன்னே சென்று
விளம்பிமுழு விவரத்தை உணர்த்த வேண்டும். (280)
விரைந்து செல்கிறார்.

## காட்சி 29.

நடிகர் : மாணவன் 1, 2
அழுமூஞ்சி, ஆதிமந்தி
சரத்குமாரன்

இடம்: காழார்; காவிரித்துறை
காலம் : பிற்பகல்

[காவிரி கரைபுரண்டோடுகிறது அவ்வெள்ளத்தில் பலர் நீந்தித் திளைக்கிறார்கள் ஆட்டனத்தியும் வந்து நீர் ஆடுகின்றான் கரையிலிருந்து எல்லோரும் கண்டுகளித்து ஆரவாரிக்கின்றனர்.]

**மாணவன் :— 1**

இந்தமுறை நீந்துவதில் வெற்றி யாருக்(கு)
என்றுதெரிந் தாற்சொல்லென் பார்ப்போம் ?

**அழுமூஞ்சி :—**

[அதுரைகாணுத ஆட்டனத்தி திடுமெனவவரக்கண்டு]ஏஏ!
வந்துவிட்டான் ஆட்டனத்தி ஆங்கே பாரு

**மாணவன் :— 2**

வாவாவா ! போய்ப்பார்ப்போம் பொழுது சாயும்
அந்தியிலே எதற்காக வெள்ளத்தின்மேல்
ஆட்டனிவ்வா ருடுகிருன் ? ... ... ... ...

**மாணவன் :— 1**

... ... ... ... அடடா வெள்ளம்
முந்தமுந்த மூழ்கியதில் திளேக்கின் ருன்பார் !
முடுகுதடா நீர்ப்பெருக்கம் அவன் முயற்சி ? (281)

**அழுமூஞ்சி :—**

ஐயையோ ! சுழல்வருதே... ஆட்டனத்தீ !
ஆட்டனத்தீ ! ஆடினது சாலும் வாவா !

**மாணவன் :— 2**

கையோய்ந்து போய்விட்டான் வாடா !

**அழுமூஞ்சி :—** [அச்சத்தோடு மறுத்து]

... ... ... ... ... ... ஊகூம்
காட்டாற்றில் நீந்தமுடி யாது நம்மால்
ஐயையோ ஆட்டனத்தீ! [தவிக்கிருன்]

**சரத்குமாரன் :—** [அப்பொழுது ஓடிவந்து]

... ... ... ... எங்கே ? எங்கே ?

**மாணவன் :— 1**

அதோபார் மூழ்குகிருன் ... ... ... ...

**சரத்குமாரன் :—** [வெகுள்பவன்போல]

... ... ... ... அவனு ? இல்லே
பொய்யையேன் கூறுகிருய் ? ... ... ... ...

**அழுமூஞ்சி :—** [சரத்குமாரனேப்பார்த்து]

போடா... வெய்யில்
போய் இருட்டுகின்றதடா கரையில்ஏறு ! (282)

[ஆட்டனத்தி வெள்ளத்தில் மூழ்கியும் சுழன்றும் ஆடும் போது நீர்த்துருத்தியால் சரத்குமாரன் நீரை ஆட்டனத்தி முகத்தில் பாய்ச்சுகிருன் அது அவன்மீது படாவிட்டாலும் அலே எழுச்சியால் திணறி வெள்ளத்தோடு செல்கிருன்]

**மாணவன் :— 2**
போய்விட்டான் ஆட்டனத்தி ஐயோ! ஐயோ !
போங்கள் அதோ ! ...... ......

**ஆதிமந்தி :—** [தலைவிரி கோலமாய் ஓடிவந்து]
...... ...... எங்கே?என் தமிழ்த்தாய்பெற்ற
சேய் எங்கே? என் தலைவன் எங்கே?(ஆ) நானும்
செல்லுகிறேன் ...... ...... ......

[காவிரியில் இறங்க ஓடுகிறாள்]

**அழுமூஞ்சி :—** [ஓடிப்பிடித்து]
...... வேண்டா வேண்டா நீபோனால்
மாய்ந்திடுவாய் வெள்ளத்தில் ......

**ஆதிமந்தி :—**
...... ...... ஐயோ என்றன்
மணவாளன் செல்லுகிறார் எனக்கேன் வாழ்வு ?...

**மாணவன் :**
சாய்ந்தாடி ஒருவேளை கிழக்கே சென்று
தானேபின் கரையேறி வருவான்

**ஆதிமந்தி :—**
...... ...... ...... நானும் (283)
கரையோரம் செல்லுகிறேன் ... ஆட்டனத்தீ !
காதலிநான் வருகின்றேன் கரைக்குவாவா !

[என்று உரக்கக் கூவிக்கொண்டே ஓடுகின்றாள்...அப்பொழுது ஆட்டனத்தியை வெள்ளம் அடித்துச்செல்வதை ஒருமரத்தருகில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் சரத்குமாரன்]

**சரத்குமாரன் :—**
புரையில்லா வெள்ளத்தில் ஆட்டனத்தி
போகின்றான் தொலைந்தான்என் பகைவன் ... அந்தக்
கரையோரம் யார்?...என்ன? யாரோ நீரில்
கடிதிறங்கிநீந்துகிறார் ... கல்லை விட்டு
விரைவாக எறிகின்றேன் ... நீயும் இந்த
வெள்ளத்தில் அவனோடு சென்று சாவு ! (284)

[சரத்குமாரன் கல்லை எடுத்து வீசிக்கொண்டே கரையோரம் சென்று பின் ஓடிவிடுகிறான். வாழைமரத் தெப்பத்தோடு ஆண் வேடம் பூண்ட மருதி ஆட்டனத்தியை அடைந்து கற்கள் அவன் மீது படாமல் தன்மேல் ஏற்கிறாள்—தலையில் அடிபட்டுக் குருதி பெருக மயங்கிய மருதி அத்தியை தன்மீது கிடத்திக் கொண்டு தெப்பததை இறுகப்பற்றிக் கொள்ளுகிறாள்—மருதியின் ஆவி சிறிது சிறிதாகப் பிரிகிறது. அப்பொழுது சோழவீரன் விரைந்து நீந்தி வந்து ஆட்டனத்தியை அடைகிறான். நிலைமையைக் கண்டு திறமையோடு வெள்ளப்போக்கில் காத்துச் செல்லுகிறான்.]

இருபத்தொன்பதாம் காட்சி முடிவு.

## காட்சி 30.

நடிகர் : கரிகாலன்
முல்லையம்மை
இரும்பிடர்த்தலையார்
சேரன் அமைச்சர்

இடம் : பாடிவீடு
காலம்: பிற்பகல்

[புலவரை எதிர்நோக்கியிருக்கும் கரிகாலன் தானே பேசுகிறான்]

கரிகாலன் :—

இன்னுமெங்கே புலவர்பெரு மானைக் காணோம் ?
இன்றியமை யாமையின்றி வெளியே செல்லார் ... ?

[அப்பொழு செவிலிமுல்லையம்மை பதற்றமும் அச்சமும் தோன்ற விரைந்துவந்து மன்னவனை வணங்கி நாத்தடுமாற விழுந்துவணங்கி]

முல்லை :—

மன்னவரே நும்அடிமை வணங்குகின்றேன்
மன்னிக்க வேண்டுமெனை ... ... ... ...

[கீழ்வீழ்ந் தரற்றுகிறாள்]

கரிகாலன் : [ஒன்றும் விளங்காமல்]

... ... ... ... யாரம் மாநீ
என்னசெய்தி ? ... ... ... ... ... ...

முல்லை :—

... ... ... ... இறைவா நான் வஞ்சப் பாவி
இந்நாட்டின் இளவரசி ... என்என் ... இல்லை
மன்னர்மகள் ஐயோ ! ... ... ... ...

கரிகாலன் :—

... ... ... ... யாரம்மா நீ?ஏன்
மதிமயங்கிப் பேசுகின்றாய் ? வந்ததைச் சொல் (285)

முல்லை :—

அரசே நான் வளர்த்து வந்த 'ஆதிமந்தி'
ஆமாம் ... என் ... இளவரசி ஆதிமந்தி
அரசே! நும் அருமைமகள் ... வேந்தே ... ஆதி! என்றன்
'ஆதி'பெற்ற அருமைமகள்—ஆதி! உன்றன்
உரைதுறந்து என் உடைமைஎன எண்ணிவிட்டேன்
உன்மகளை ஐயோ ! நான் ... ...

கரிகாலன் :— [சிறிது வெறுப்பாய்]

என்ன ஆதி ? ... ... ... ...
விரைவாகக் கருத்தைச் சொல் ... ...

முல்லை :— [தடுமாறி]

... ... ... ... வேந்தே! என்பால்
விட்டுவிட்டுப் பிரிந்துவிட்டாள் உங்கள் சொத்தை (286)

கரிகாலன் ;— [சினந்து]

ஆதி? ஆதி என்ன ஆதி ? ... ...

முல்லை :— [தன்னிடமிருந்த விரலாழியைக் காட்டி]
அடையாளம் பாருங்கள்

கரிகாலன் :—
ஆ... ஆ... ஆதி ... ...

[அந்தக் கணையாழிதான் ஆதிக்களித்த காதல் பரிசாதலின் கண்டவுனே பலாண்ணி மயங்கி விழுகிருன் அப்பொழுது இரும்பிடர்த்தலையார் வந்து நிலைமையைப் புரிந்து முதலுதவி செய்கிருர் சிறிது விழித்துப் புலம்புகிருன்]

ஆதி! என் அன்பே ஆருயிரே!

முல்லை :— [செய்வதறியாது அஞ்சி]
... ... ... ... ... ... வேந்தே
ஆதிபெற்ற மகள் உங்கள் ஆதிமந்தி
வீதியிலே திரிகின்ருள் ... ... ... ...

இரும்பிடர்த்தலையார் :—
... ... ... ... ... ... இல்லைமன்ன!
விரைவாகப் புறப்படுநீ கடற்கரைக்கு!

கரிகாலன் :—
சேதிஎன்ன மாமாஎன் செல்வத் தைநான்...

இரும்பிடர்த்தலையர் :—
தெரியுமெனக் கவளை நீ அங்கே காண்பாய் (287)

[அப்பொழுது சேரனுட்டமைச்சர் வந்து வணங்கி]

சேரன் அமைச்சர் :—
பணிகின்றேன் பாவலரே!

இரும்பிடர்த்தலையார் :—
... ... ... ... அமைச்சே! வாரும்

சேர அமைச்சர் :—
பணிகின்றேன் வேந்தே!

இரும்பிடர்த்தலையார் :—
... ... ... ... நீர் புறப்படுங்கள்
தனிவதற்குப் போதில்லைப் புறப்படுங்கள்
தாங்களும் எம்முடன்வாரும் அங்கே உங்கள்
அணிகமழும் ஆட்டனத்தி காவிரித்தாய்
அணைப்பினிலே செல்லுகின்ருன்

சேர அமைச்சர் :—
... ... ... ... அவரைப் பற்றி

இரும்பிடர்த்தலையார் :—
துணிந்துசொல்ல இயலவில்லை புறப்படுங்கள்

கரிகாலன் :—
துன்பமொன்றும் ... ... ... ...

இரும்பிடர்த்தலையார் :—
…… நேராது வாரும் போவோம் (288)

[எல்லோரும் விரைந்து காவிரிப்பூம் பட்டினத்துறை முகம் நோக்கிச் செல்லுகின்றனர்]

முப்பதாம் காட்சி முடிவு

## காட்சி 31

நடிகர் : கரிகாலன், முல்லை கூத்தன், இசைமுகிலோன், சரத்குமாரன், ஆதிமந்தி, இரும்பிடர்த்தலையார்,

இடம் : கடற்கரை
காலம் : நிலவு வெளிப்படும் முன்னிரவு

[கரையோரமாகப் புலம்பிக்கொண்டே வந்த ஆதிமந்தி கடற்கரையில்வந்து நின்று ஆட்டனத்தியை எதிர் நோக்கிப் பேதுற்று]

ஆதிமந்தி :—
அலைகடலே! என்கணவர் எங்கே? ஆடல்
ஆணழகன் தனைஎங்கே ஒளித்துக் கொண்டாய்?
மலைபுரையும் தோளுடையான் எங்கே? என்றன்
மணவாளன் எங்கே? நீ சொல்வாய்? ஆடும்
தலைமகனைக் காட்டு! இன்றேல் என்றன் காலால்
தண்ணீரை எற்றி உனை வற்றச் செய்வேன்
கலைமகிழும் காளையைஎன் கருத்துள் ஆடும்
காதலனைக் கண்மணியைத் தரமாட்டாயா? (289)

[சோர்வுற்று விழுந்தெழுந்து தேம்புகிருள் அப்பொழுது கரிகாலன் முதலியோர் வருகின்றனர். முல்லை விரைந்தோடிவந்து ஆதியைத் தழுவிக்கொண்டு]

முல்லை :—
அம்மாஎன் கண்ணேஎன் உயிரே வாம்மா!

ஆதிமந்தி :—
ஆட்டனத்தி கரையேறி வந்திட்டாரா?

முல்லை :—
அம்மாஎன் ஆதிபெற்ற மகளே பெண்ணே;

ஆதிமந்தி :—
ஆர் நீங்கள் ஆட்டனத்தி கடலின் மேலே
கும்மாளம் போடுவதைக் காண்பதற்குக்
குதித்தோடி வந்தீரோ? போங்கள் போங்கள்!
(மதிதிரிந்து அழுகையுடன்)
சும்மாஏன் நிற்கின்றீர்! நடமாடுங்கள்

கரிகாலன் :— [நொந்து]
சோழர்குல விலக்கே!ஆ! என்ன துன்பம் (290)

இரும்பிடர்த்தலையார் :—
அங்கேபார் மன்னவ!நம் ஆட்கள் எல்லாம் ……

[இசைமுகிலோனும் சிலவீரர்களும் மருதியையும் ஆட்டனத்தி யையும் ஏந்திவந்து கரிகாலன் முன் வைத்துவிட்டு வணங்கியிருந் தனர். ஆட்டனத்தி உயிர்ப்பு இருக்கிறது ஆட்டனத்தியை பார்த்த உடனே ஆதிமந்தி வந்து]

**ஆதிமந்தி :—**

ஆட்டனத்தி ஆட்டனத்தி ! என்னைப் பாரும்
(மயக்கம்)

**வீரன் :—**

எங்களுக்கு முன்இவ்வாள் காத்துச் சென்றான்
எவ்வாறோ காயமுற்றான் புண்ணி னின்றும்
பொங்கிவழி குருதியிவன் உயிரைக் கொண்டு
போய்விட்டதரசே ...... ...... ......
(தலைப்பாகை விழவே மருதி என அறிந்து)

**முல்லை :—** [அலறி]

...... ...... ஆ மருதி

**கூத்தன் :**

...... ...... யார் யார் ?
எங்கள் குலக்கொடியே ஆ மருதி! அம்மா

[முல்லையும் கூத்தனும் மயங்கி அழுகின்றனர் இசைமுகிலோன் பெருந்துன்பத்தால் அசைவற்றிருக்கிறான்—அப்பொழுது அங்கு வந்த சரத்குமாரன் நிலைமையைப் பார்த்து மதிதிரிந்து பித்தேறிப் புலம்புகிறான் — ஆட்டனத்திக்கும் ஆதிமந்திக்கும் முதல் உதவி நடக்கிறது]

**சரத்குமாரன் :—**

என்ன?என்ன? மருதியுமா செத்துவிட்டாள்? (291)
[மூளை குழம்பிச் சிரிக்கிறான் பேய்ச்சிரிப்பு—பின்பு]

[ஆசிரியப்பா]

அத்தியும் செத்தான் ஆதியும் போனாள்—(சிரிப்பு)
மருதிக்குப் புத்தி மடிந்து விட்டது (அழுகை)
மருதி! மருதி! நீயேன் செத்தாய் ?
கல்லால் உன்னையா அடித்தேன்(சிரிப்பு) மன்னு
எனக்குத் தெரியாது...[அழுகிறான் சிரிக்கிறான்]

**கரிகாலன் :—** [ஐயமும் வெகுளியும் தோன்ற]

யார்இப் பித்தன் ?

**இசைமுகிலோன் :—**

ஆதிக்கிந்த அநீதி செய்த
கொடியவன் கயவன் வஞ்சகன் தீயன்
நச்சுப் பாம்பிவன் ...... ......

**கரிகாலன் :—** [சினத்துடன்]

...... ஏஎ இவனை ......

**இரும்பிடர்த்தலையார் :—**

வளவா பொறுபொறு வஞ்சகன் அவன்செயல்
வினைவை அவனே விருப்புடன் ஏற்பான்

**சரத்குமாரன் :—**

மருதி மருதி! நீசாவாதே (சிரிப்பு)
சத்தியமாக ஆட்டனத்தி
யாரு தெரியுமா?(உம்) சொல்லாதே
படைத்தலைவர்—இச்—

[சேரன்படைத்தலைவன்—தன்னை வெட்டிவிடுவான் என்ற குறிப்புடன்]

சொல்லாதே... வெள்ளம் காவிரிவெள்ளம்
வெள்ளம் ஆதிமந்தி மருதிவெள்ளம்
ஓஓ வெள்ளம் ...... ......

[ஓடுகிறான் ஓடிக் கடலில் விழ ஒரு பேரலை அடித்துச் செல்கிறது]

முப்பத்தோருங் காட்சி முடிவு

## காட்சி 32

நடிகர் : கரிகால் வளவன் முதல் யாவரும்.

இடம் : சோழன் அரண்மனை ஓலக்கமண்டபம்

காலம் : முற்பகல்

[ஆதிமந்தியை ஆட்டனத்திற்கு மணஞ்செய்து கொடுத்து தனக்குரிமையான கருவூருக்கு; அரசனுக்கி முடிசூட்டுவிக்கிறான் கரிகாலன்—இளஞ்சேரல் தன் மூத்தோனிடமே சேர நாட்டை ஒப்பித்து ஏற்க வேண்டுகிறான்—அத்தி தன் இளவலே சேர நாட்டை ஆளவேண்டுமென்று தம்பியிடமே அளிக்கிறான் மருதிக்குச் சிலையெடுத்து ஆதியும் அத்தியும் நன்றி செலுத்துகின்றனர்]

**கரிகாலன் :—**

அன்புள்ள குடிமக்காள்! அருமை மாமா!
அமைச்சர் படைத்தலைவர்களே அறிவால் நாட்டை
இன்புறுத்தும் புலவர்களே! கலைவல்லோரே
எல்லோர்க்கும் என்வணக்கம்—நெடுநாளாகத்
துன்புறுத்தி எனைவதைத்த துயரம் நீங்கத்
தூயதொரு கழுவாயைச் செய்ய, உங்கள்
முன்புவந்து நிற்கின்றேன். பெரியீர்! ஈண்டு
முழுநிலவைப் போல்விளங்கும் செல்வி என்றன் (292)
மகள் இவளின் தாயையறி யாதிழந்தேன்
மாதரசி ஈன்றதமிழ் மாணிக் கத்தை
அகமகிழப் பெற்றேன்இங் கமர்ந்திருக்கும்
ஆணழகர் ஆட்டனத்தி என்னும் பேரால்
திகழ்கலையாய் வாழுபவர் சேரநாட்டுச்
செந்தமிழ்வேந் தன்மகனாய் உதித்த செம்மல்

பகவனருள் ஊழாலே பாணராகிப்
பாராளும் பதவியையின் றேற்க உள்ளார் (293)
ஆட்டனத்தி என்னுமிந்த ஆடல்மன்னற்(கு)
ஆதிபெற்ற என்னருமை மகளைத் தந்திந்
நாட்டிலொரு பகுதிக்கும் வேந்தனுக்கி
நாவலர்கள் போற்ற நறுங்கலைகள் வாழக்
கோட்டமிலாச் செங்கோலை ஏந்தச் செய்யும்
குறிக்கோளை உடையேன் யான்;என் உளத்தின்
வாட்டமெலாம் இனித்தவிர்த்தேன் வாழ்விலின்றே
மனமகிழ்ந்தேன்—மணமக்கள் நீடுவாழ்க! (294)
முடிசூட்டுந் திருப்பணியைப் புலவர் ஏற்று
முன்னின்று செய்தருள்வார் ... ... ... ...

**இரும்பிடர்த்தலையார் :—** [அவையைநோக்கி]
... ... ... ... வணக்கம் ! வேங்கைக்
கொடிநாட்டுக் குவலத்தை ஓர்க்கு டைக்கீழ்
கோடாமல் ஆளுகின்ற வேந்தன் வாழ்க !
படிகாட்டும் சான்றோர்கள் போன்ற இந்த
பாவையுடன் நாடாளும் பொறுப்பை ஏற்று
மிடியோட்டி நாளும் வாழ்க வென்று
விருப்பமிக வாழ்த்திமுடி சூட்டுகின்றேன் (295)
செம்பியனுர் வழிமருமகன் வாழ்க! வாழ்க!
சேரர்குலச் செம்மல்நீ டூழி வாழ்க !
நம்பியொடு நங்கையுளம் ஒன்றி நாளும்
நற்கலைசேர் சான்றோர்கள் பேரற்ற வாழி !
அம்புவியில் ஆதிமந்தி ஆட்டனத்தி
ஆண்டுபல ... ... ... ... ... ...

**இளஞ்சேரல் :—** [ஓடிவந்து மகிழச்சியுடன்]
வாழிய!என் அண்ணு அண்ணு
தம்பியுமை வணங்குகிறேன் ... ... ... ...

**ஆட்டனத்தி :—** [மகிழ்ச்சியோடு]
... ... ... ... ... ... தம்பி

**இளஞ்சேரல் :—** [தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீருடன்]
அண்ணு —— ... ... ——
தாங்களினி என்பொறுப்பை ஏற்கவேண்டும் (296)
குடநாடு தங்களது தாங்கள் அங்குக்
கோன்முறையால் வந்தரசை ஏற்க வேண்டும்
திடமாய்நான் இனிஆளேன்—சேரன்பெற்ற
செஞ்சுடரைக் காணுமட்டும் யான்பொறுத்தேன்
இடமுழுதும் தங்களதே அண்ணு! தாங்கள்
இனிநாட்டின் ஆட்சியினை ஏற்க வேண்டும்